தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை 1981, மார்ச் 26.

பங்குனி 13, ரௌத்திரி—திருவள்ளுவர் ஆண்டு 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்."

பகைவர் உள்ள போர்க்களத்தில் அஞ்சாமல் சென்று சாகத் துணிந்தவர் உலகத்தில் பலர். கற்றவர் அவைக்களத்தில் அஞ்சாமல் பேசவல்லவர் சிலரே.

I. தன்னிலை விளக்கம்.

வினா—விடை நேரத்தில் அமைச்சர்கள் அவையில் இருத்தல்.

திரு. ரா. உமாநாத் : நேற்று நடந்ததின் ரிசல்ட் இன்று எல்லா அமைச்சர்களும் வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, 23 ஆம் தேதியே 11 மணிக்கு நான் கடிதம் மூலமாக அவைக்கு வர முடியாமல் இருப்பது பற்றி பேரவைத் தலைவருக்கு எழுதி இருக்கிறேன். அமைச்சர் முன்கூட்டியே இரண்டு தினங்களுக்கு முன்பே எழுதிக்கொடுத்திருக்கின்றபோது...................... (குறுக்கீடு)....நான் இந்த அவையிலுள்ள உறுப்பினர்களின் சார்பில் பேரவைத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் வரவில்லை என்றால் கேள்வி வருவதற்கு முன்பே அதைத் தெரிவித்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்காது.. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நேற்று நடந்த விவரம் தெரியாது. ஆகவே, அது குறித்து இப்போது விளக்கம் அளிக்க ஆரம்பித்தால் சரியாக

இருக்காது. நேற்றைய தினம் 20 கேள்விகள்: சம்பந்தப்பட்ட எந்த அமைச்சரும் வரவில்லை. நாவலர் ஒருவர்தான் இருந்தார். ஆனால், அவர் சம்பந்தப்பட்ட கேள்விகள் இல்லை. ஆகவே, இதுபற்றிய விளக்கத்தை எல்லாம் நான் இப்போது அனுமதிக்க முடியாது.

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

டெல்லி—தமிழ்நாடு இல்லத்தில் பெருந்தலைவர் காமராஜ் சிலை.

*வினா எண் 486—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் சிலையை வைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்ளே, தனக்கென வாழாது பிறருக்காகவே வாழ்ந்து மறைந்த மனிதர் குல மாணிக்கம் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் சிலையை இனியாவது அங்கே வைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, யாருடைய சிலையையும் அங்கே வைக்கின்ற முடிவை அரசு எடுத்துக் கொண்டிருக்கவில்லை என்பதைத்தான் நான் இல்லை என்று குறிப்பிட்டேன். முன்னாள் முதல்வர் அவர்கள் என்ற முறையில் அவர்களுடைய உருவப் படங்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. ஆந்திரகேசரி திரு. பிரகாசம், திரு. ஓ. பி. ராமசாமி, திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா, மூதறிஞர் ராஜகோபாலாச்சாரி, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் எம். பக்தவச்சலம், பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி ஆகியோருடைய உருவப்படங்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

அங்கே பேரறிஞர் அண்ணாவின் அரை உருவச் சிலையும், திருவள்ளுவரின் முழு உருவச் சிலையும் வைக்கப்பட்டிருக்கின்றன. வேறு யாருடைய சிலையையும் வைக்கின்ற திட்டம் அரசிடத்திலே இல்லை.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, டெல்லியிலே தமிழ்நாடு இல்லம் அமைப்பதுபற்றி பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதல்வராக இருக்கும்போது திட்டமிடப்பட்டது. அதற்குப் பிறகு கலைஞர் கருணாநிதி அவர்கள் காலத்திலே அதற்குத் திறப்பு விழா நடத்தப்பட்டது. ஆகவே,